உ

ஸ்ரீராமஜெயம்.

25NOV 1924
MADRAS



# கலியுகத்தின் மகத்துவமாகிய

# காலக்கியானம்.

இஃது

போத்தலூர் வீரப்பிர்மம் அவர்களால்

தெலுங்கில் அருளிச்செய்யப்பட்டதை

திருவநகரத்திலிருக்கும் திருக்கண்ணய்யன் குமாரன்

அனந்தசுப்பய்யரால்

தமிழில் மொழி பெயர்ப்பித்ததை

எம். இ. எம். பாஸ்கரதாஸ் அவர்களால்

பார்வையிடப் பெற்றது

டி. கிருஷ்ணசாமி பிள்ளை அன் பிரதர்ஸ்.
...வியாபாரம் புதுமண்டபம்
...துரை.

1924 [அணா 2.

Q2
N24
181826

...ஷ்ம்வியா பிரஸ், மதுரை-24.

வெளியாகி...

புலவர்கள் புகழ்ப்பெற்ற

...ங்கையா அவர்களியற்றிய

## நூத... பக்திரசக் கீர்த்தனங்கள்.

முக்திக்காக சதா துதித்துப்பக்தி புரிவோர்களுக்கும் பாட விற் சிறந்த நாடக பிரியர்களுக்கும் இன்பம் விளைவிக்கும் தற்கால நாகரீக வர்ணமெட்டுகளமைந்த பாடல்களடங்கியது விலை 0-4-0

## கலியுக மகத்துவ காலக்கியானம்.

வீரபோக வசந்தராயர் கதை; இப்பூவுலகில் இனிநடைபெறும் அரிய பெரிய விஷயங்களடங்கியது 16 பக்கங்கள் விலை 0-2-0

செந்தமிழ் வித்துவான்

வெங்குநாகையசாமிரெட்டியாரியற்றிய

## தெய்வத்திருநாம சத்விஷய கீர்த்தனை.

இதன்கண், அடங்கியுள்ள கீர்த்தனைகளின் பெருமையைக் கூறவெனின் இவ்வேடு இடந்தராது முற்காலத்து தியாகராஜய்ய ரவர்களின் கீர்த்தனைகளைப்போன்று எல்லாம்பக்திரசம்பிய கீர்த் தனைகளேயாதலின் இவைகளைத் தற்காலத்து "தியாகராஜய்யர் கீர்த்தனைக' ளெனினுந்தகும் வாங்கி வாசிப்பின் உண்மை விளங் கும் சொற்ப காப்பிகளே தயார் விலை 0-6-0

உடுமலை முத்துச்சாமி கவிராயரவர்கள் மாணவர்

R. K. பூமிபாலகதாஸரியற்றியவை

## தேசாபிமானிகளின் திலகரத்தினமாலிகா

இது, படங்களுடன் சிந்தைக்கினிய செந்தமிழ் கமழும் சந் தப்பாடல்கள் நிறைந்ததும் படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட பாருள்ளம் கிளர்ச்சி மிகுக்கவும் பாடப்பாடத் திகட்டாத தேச பக்தியை தரக்கூடியது. விலை அணு 2.

## எம். இ. எம், பாஸ்கரதாஸரவர்களியற்றிய

| | |
|---|---|
| புதிய அதிப்பிரசங்க விகடன் (விடாகதைப்பு) | 0—4—0 |
| அற்புத நூதனக்காவடிச்சிந்து | 0—2—0 |
| பக்தியானந்த கீர்த்தனப்பதங்கள் 1 & 2 | 0-12—0 |
| கொள்ளிடம் காவேரி வெள்ளக்கொடுமை சிந்து | 0—1—( |
| வள்ளி சுப்பிரமணியர் தர்க்கம் (வளையற்சிந்து 2-வது) | 0—1—0 |
| தேசாபிமானிகள் திலகம் 1, 2, பாகம் | 0—8—0 |
| பன்மத தகனம் இசதி புலம்பல் | 0—2—0 |

த. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,

புத்தக வியாபாரம், மதுரை.

உ

ஸ்ரீ தேவி சகாயம்.

MADRAS

# கலியுகத்தின் மகத்துவமாகிய

# காலக்கியானம்.

## காப்பு-வெண்பா.

நல்லவிநாயகரை நாள்தோறுமே தொழுதால்
அல்லல் வினையெல்லா மகலுமே—சொல்லரிய
வீரவசந்தமா மேருவெனு மிப்பொருளாம்
சீதரனை யெப்பொழுதுந் தேற்று.

## சரஸ்வதி துதி.

தண்டாமரையயனார் தம்பாவினி திலங்கும்
வெண்டாமரைபோன்ற மேனியார்—பெண்டாள்
பூவிற்கெழில்பரவிப் போற்றுங்காலக்யானப்
பாவிற்கருள்புரியன்பால்.

## துதி

ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தியே நம:
ஸ்ரீ வீரபாக வசந்தராய நம:
ஸ்ரீ சிதம்பர தீக்ஷதரே நம:
ஸ்ரீ இராமயோகி அய்யரே நம:
ஸ்ரீ கனக துர்க்கியம்பாள் நம:

## ஆசிரிய விருத்தம்.

சீர்பெற்ற உலகமெலாம் இருளற்று தெளிபெற்ற
ஸ்ரீ விஷ்ணு அவதாரமாய்
ஜெகதலம் புகழ்பெற்ற காஷ்மீரதேசத்தில்
திலர்தாம்பாள் கெற்பமதனில்
பேர்பெற்று வாழ்கவே பிள்ளையாய் ஜெனமித்துப்
பூமிதனிலே பிறந்து
பெரியோர்களாதரவிற் சம்பன்ன பாஷைகள்
பிரபல்யமாய்ப் படித்து
பார்பெற்ற மகேந்திரகிரி பர்வதத்தினடியினில்
பட்டணமமைத்த பின்பு
பாராசர் பெற்றமணி முடிசூடி குடையின்ற
பாருலகை யாளுமன்னன்
கார்பெற்ற முகில்வண்ண வீரபோக வசந்த
கருணாகடாக்ஷ பொருளைக்
கண்டவர் படித்தவர் கருத்தினில் நினைத்தவர்
கதிர்போல் வாழ்குவாரே.

181876

# சரித்திர வரலாறு.

ஸ்ரீ கௌரிகுண்ட தீர்த்தத்திற்கடுத்த கேதாரவனத்திலே இருக்கும் குகைக்குள்ளாக அநேககாலம் தவசாய் நின்ற மஹாத்மாக்கள் ஸ்ரீ சிதம்பர தீக்ஷிதருக்கும், ஸ்ரீ ராமயோகி ஐயருக்கும், ஸ்ரீ வீரப்பிரமத்தினுடையசரித்திரத்தைஉபதேசித்து நீங்கள் இந்த உலகத்திலிருக்கிறவர்களுக்கு போதித்துப் பிரசங்கஞ் செய்யுங்கள் என்று ஆக்ஞாபிக்க, அவ்வண்ணமே ஸ்ரீசிதம்பரதீக்ஷிதரும் ஸ்ரீராமயோகியையரும் துன்முகி வரு வைகாசிமீ ௨௰ திரயோதசி வியாழக்கிழமை இந்த சுபதினத்தில் இந்த சௌசன்னிய பத்திரிகையைப் பிரசுரித்தார்கள். ஸ்ரீ கணபதியே நம:

ஓர்நாள் தேவேந்திரமகாராஜாவானவர் முப்பத்துமுக்கோடி தேவர்களையும், நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகளையும் சகலமானதேவர்கள் முதலானயாவர்களையுந்தம்முடைய தெய்வசபைக்கழைப்பித்துத் தேவர்களைப்பார்த்து ஓர்வசனம் சொல்லுகின்றார்.

ஓ தேவர்களே, பூலோகத்திலே துஷ்டர்கள் தனதான்ய சம்பத்துகளால் கர்வமடைந்து பெரியோர் சிறியோ ரென்றறியாது மரியாதையில்லாமல் வம்பு தும்புகளான வார்த்தைகளைப் பேசுகிறதும், ஜனங்களை தூஷணிக்கிறதும், இப்படி துஷ்டர்கள் அதிகரித்து தான தருமங்கள் முதலான விஷயங்களையும் நல்லோர்கள் பெரியோர்கள் பத்தினிமார்க்கமாயிருக்கிறதாய்மார்களையும் எண்ணாமல் நடக்கிறபடியால் பூமியில் பாவம் மூன்றுபங்கும் புண்ணியமொருபங்குமாயிருக்கிறது. அதனாலே பூமிதேவியானவள் பாரஞ்சுமக்கமாட்டாமல் முறையிடுகின்றாள். இதற் கென்செய்வோமென்று தேவர்களைப் பார்த்து தேவேந்திர மகாராஜா கேட்க, அதற்கு தேவர்களெல்லோரும் ஒருமித்துச் சொல்லுகிறார்கள்; வாருங்களய்யா தேவேந்திரமகாராஜாவே, தங்களுக்குதெரியாத யோஜனைக்கு எங்களிடத்திலென்ன இருக்கிறதோ? ஆனால் எங்களுக்குத் தெரிந்தவரைக்கும் சொல்லுகிறோம்.

இந்த கலியுகத்தில் இதுவரையில் பாவம் அதிகமில்லாமலிருந்து இப்பொழுது துஷ்டர்களதிகமானபடியால் பாவம் அதிகமாயிற்று. ஆகையினாலே அந்த துஷ்டர்களைச் சம்மாரஞ்செய்ய மும்மூர்த்திகளாலே யாகுமே யொழிய மற்றவர்களா லாகாது. அப்படி யிருப்பதால் உங்களுடைய திருவுளத்துக்கேற்றபடியே நடவுமையாவென்று தேவர்கள் சொல்லக்கேட்டு தேவேந்திர

மகாராஜா சொல்லுகிறார். ஓ தேவர்களே, பூமியிலே துஷ்டர்கள் அதிக
மானால் அவர்களைச் சம்மாரஞ்செய்து பூமிபாரந்தீர்க்க ஸ்ரீ மகா
விஷ்ணுவே அவதாரம் செய்ய வேண்டுமே தவிர வேறில்லை.

நாம் அந்த ஸ்ரீமந் நாராயணரிடத்தில் போய்ச் சொல்லிக்
கொள்வோம் வாருங்கள் தேவர்களே என்று சொல்ல, அப்பொ
ழுதே தேவர்களெல்லோரும், தேவேந்திரமஹாராஜா முதலான
வர்களுங்கூடிக் கொண்டு வைகுந்தம்போய் ஸ்ரீ மஹாலட்சுமி
மனோஹரனான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைக்கண்டு சாஷ்டாங்க
மாக நமஸ்காரஞ் செய்து சுவாமி, பரமபுருஷா, அகிலாண்ட
நாயகா, ஆதி பரப்ரம்ம வஸ்துவே, என்று தேவேந்திரன் முத
லான தேவர்களெல்லோரும் ஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நிற்
கையில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் தேவேந்திரனையும்
தேவர்களையும் பார்த்து, நீங்கள் என்னகாரணத்தி நிமித்தமாய்
இவ்விடத்திற்கு வந்தீர்களென்று திருவுளம்பற்ற, தேவர்கள்
சொல்லுகிறார்கள்: ஓ பரமபுருஷா பரப்ரம்ம வஸ்துவே, ஆதி
மூலமே, அனாதரக்ஷகா, சர்வலோக தயாபர மூர்த்தியே, பூலோ
கத்திலே கலியுகமானபடியால் துஷ்டர்கள் அதிகமாகி மதோன்மத்த
ராய் கர்வமடைந்திருக்கிறார்கள் அதுவுமில்லாமல் கர்வ வல்லமை
யுடைய ராஜ்யமாயிருக்கிறது சில ராஜாக்கள் நீதியில்லாமல் துர்
நீதியாய் ராஜ்யமாளுகிறார்கள். இந்தக் கலியுகப் பிரமாணம் நாலு
லக்ஷத்து முப்பத்தீராயிரம் வருஷம். அதில் இதுவரையிற் சென்
றது வருஷம் 4994. அதற்குள் பாவம் மூன்றுபங்கும் புண்ணியம்
ஒருபங்கு மானபடியால் பூமிதேவி பாரம் பொறுக்கமுடியாமல்
முறையிடுகின்றாளென்று தேவர்கள் சொல்ல, அதுகேட்டு வைகுந்
தநாதராகிய ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் திருவுளம் பற்று
கிறார்.

தேவேந்திரனே, நீங்கள் சொல்லுகிறது சரிதான். ஆனால்
பூலோகத்திலே ஜெனமித்து துஷ்டர்களை சம்மாரஞ்செய்து
பூமிபாரந்தீர்க்கிறோம். நீங்கள் அதைப்பற்றி விசனப்படவேண்டி
யதில்லை. யென்று சொல்லி பகவானான ஸ்ரீமந் நாராயணமூர்த்தி
யும், அப்பொழுது தானே சாம்பசிவனுக்கு அறிக்கை செய்ய
அவரும் கருணைகூர்ந்து பிர்ம்ம தேவரை வரவழைத்து மும்மூர்த்தி
களுங்கூடி யிருக்கின்றபொழுது, ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சொல்
லுகின்றார்; ஓய் புண்ணிய புருடரே, நான் துஷ்டநிக்ரக சிஷ்டபரி
பாலனம் பண்ணி பூமிபாரந் தீர்க்கும் பொருட்டாய்ப் பூலோகத்
திலே போய் காஸ்மீரதேசத்து இராஜாவாகிய தர்மராஜா வம்மி
சத்திலே பிறந்திருகின்ற ஜெயசிங்கு மகாராஜனுக்கு மனைவி
யாகிய இலக்ஷ்மியம்மாளென்கிற பதிவிரதை வயற்றிலே பிறந்

ன்றேன் நீங்களிருவரும் நமக்கு ஆத்தாசையாக பூலோகத்திலே
உங்களுக்குத் தகுந்த பிர்ம்ம ருத்திர வம்மிசத்திலே பிறந்து
நம்முடைய இருப்பிடத்திற்கு வந்துசேருங்களென்று சொன்னார்.
அப்படியே பிர்ம்மாவானவர் பிரம்மகுலத்திலே பிறந்து ராமயோ
கியாகவும் ஸ்ரீ சாம்பசிவன் முக்கோடி கிரூமத்தில் ருத்ரவம்சத்
தில் சிதம்பரதீக்ஷிதராகவும் அவதரித்தார்கள் உடனே அந்த
கபட நாடக சூஸ்திரதாரியாகிய ஸ்ரீ மகா விஷ்ணுவானவர் துர்க்
காதேவியான சத்தியை யழைத்து நீ துஷ்ட நிக்கிரக சிஷ்டபரி
பாலனஞ் செய்யும் பொருட்டு பூலோகத்திப்பிறக்கவும், மற்றதே
வர்களை பரிவாரங்களாகவும் பிறக்கும்படி கட்டளையிட்டுத் தேவர்
களைத் தங்களிடத்திற்குப்போக உத்திரவு செய்தார். உடனே
அந்த ஸ்ரீ மந்நாராயண மூர்த்தியானவர் அந்தக்ஷணமே காஷ்மீர
தேசத்து அரசனான ஜெயசிங்கு மஹாராஜாவுக்கு ஆக்ரமித்து
பாரியாளான திலர்தமையம்பாள் கெற்பத்தில் உற்பத்தியாகி
முப்பத்திரண்டு லக்ஷணங்களுடன் சுபதினத்தில் சாதாரணவரு
தைமீ ௨௰௳ குருவாரத்திலே அவதரித்தார். அவரை பார்க்கு
மிடத்து கோடிசூரியப் பிரகாசம் போலேயிருந்தார். நவக்கிரஹங்
களெல்லாம் சுபஸ்தானத்திலே யிருந்தது அந்தபகவான் பிறந்து
சிலநாளைக்குப் பின்பு பெரியோர்களைக் கண்டு தெரிசிக்க வேண்டு
மென்று கருத்துண்டாகி, அந்த பாலகன் ஏகமாய்ப் புறப்பட்டுச்
சோணியதேசத்து கௌதமதீர்த்தத்திற்கடுத்த கோதாவரிஆரண்
யமான பத்திரிகேதாரவனத்திலே வருகையில் ஒரு குகையைக்
கண்டு அந்த குகைக்குள்ளாக பார்க்க, அங்கே அனேகநாளாய்
கண்ணைமூடிக்கொண்டு தபசுசெய்கிற மகாத்துமாக்களைக் கண்டு
அவர்கள் பாதத்திலே சாஸ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து கை
களை கட்டிக்கொண்டு இவர்கள் எப்போது கண்ணை விழிக்கிறார்
களோ வென்று வெகுபயபக்தி விசுவாசத்துடனேநின்றார். அந்த
மகானுபவரான முனீஸ்வரர்கள் நேமநிஷ்டை முடித்து கண்ணை
திறந்து முன்னாலே நிற்கப்பட்ட பாலகுமாரனைப்பார்த்து இந்தப்
பாலகன் யாரென்று தங்களுடைய ஞானதிருஷ்டியினால் பார்க்கு
மிடத்தில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தி தானே பூமிபாரம் தீர்க்கும்
நிமித்தமாகப் பூலோகத்திலே அவதரித்திருக்கிறா ரென்று
அவருடைய வரலாற்றை நன்றாயறிந்து அந்த பாலகனைப் பூசித்து
ஓய் இராஜகுமாரகா! நீ இந்த பூலோகத்தை ஆளுகிற நிமித்தம்
ஸ்ரீமந் நாராயண மூர்த்தியினுடைய அம்சையினாலே காஸ்மீர
தேசத்து இராஜாவாகிய ஜெயசிங்கு புத்திரராய் ஜெனித்து நீர்
இந்த அறுநூறுகோடி பூமண்டலமும் ஏகச் சக்ராதிபதியாய்
ஒரு குடையின் கீழ் ஆளப்போகின்றீர், உம்முடைய நாமதேயம்
வீரபிர்மம் என்று சாற்றினார்கள்.

அப்போது அந்தபாலகன் ஓ முனீஸ்வரர்களை என்மேரில்
கருணை கடாக்ஷம் வைத்து சகல வித்தைகளும் சம்பன்ன பாஷை
களும் நாலுவேத முதலான சாஸ்திரங்களும் உபதேசித்தருள
வேண்டு மென்று கேட்க, அதற்கு முனீஸ்வரர்கள் சந்தோஷப்
பட்டு அப்படியே ஆகட்டு மென்று சகல வித்தைகளும் கற்பித்து
கொடுக்க பாலகன் அப்படியே வித்தியாப்பியாசஞ்செய்துவந்தனர்

ஓர் நாள் இராமயோகி ஐயரிடத்திற்கு நாரதமகாமுனீஸ்வரர்
வந்து, ஓய் இராமயோகிஐயரே, அகிலாண்டகோடி பிர்மாண்ட
நாயகரான ஸ்ரீமந் நாராயண மூர்த்தியானவர் காஸ்மீரதேசத்து
இராஜாவான ஜெயசிங்கு புத்திரராக ஜெனித்து அங்கேயிருந்து
சிலநாளைக்குப் பிறகு ஈசானிய தேசத்திலே கௌதமதீர்த்தத்
திற்கு அறுகாமையிலிருக்கிற கோதாவரி ஆரண்யமான பத்திரி
கேதார வனத்திலே ஒரு குகையைக் கண்டு அதில் தபசு செய்
கிற இரண்டு யுகாந்தகாலத்து முனீஸ்வரர்களிடத்திற்குப் போய்
நாலுவேத சாஸ்திரங்களும்வில்வித்தைமுதலானசம்பன்னபாஷை
களும் அப்பியாசஞ் செய்துகொண்டிருக்கிறாரென்று விபரமாய்ச்
சொல்லிவிட்டு அவர் எதாஸ்தானத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அதை கேட்டு ராமயோகி ஐயரானவர் நாரதர் சொல்போலே
அந்தக்ஷணமே எழுந்திருந்து சிதம்பர தீக்ஷதரிடத்திற்குப் போ
கும்போது, அவர் எதிரே வரக்கண்டு, ராமயோகி ஐயர் சிதம்பர
தீக்ஷதரை பூசித்து நமஸ்காரஞ்செய்து ஸ்ரீமந் நாராயண மூர்த்தி
யினுடைய பிறப்பும் அவரிருப்பிடமும் நாரதர்சொன்ன பிரகாரம்
சொல்ல அவர் சந்தோஷப்பட்டு நாமிருபேரும் அந்த பகவான்
வித்தியாப்பியாசஞ் செய்யுமிடத்திற்குப்போய் அவ்விடத்திலிரு
க்கிற திவ்ய தேஜஸுள்ள மூர்த்தியாகிய பாலகுமாரனையும்
முனீஸ்வர மகாத்துமாக்களையும் தெரிசித்து, அவர்கள் சொற்படி
நடப்போம் வாருமையா ராமயோகி ஐயரே என்று சொல்லி இரு
பேரும் கோதாவரி ஆரண்யமாக பத்திரிகேதார வனத்திற்கு
வந்து அவிடத்திலே அனேககாலமாக தபசு செய்கிற முனீஸ்வர
ரைக்கண்டு தரிசனஞ் செய்துநிற்கையில் அவர்களிடத்தில், கோடி
சூரியப்பிரகாசம்போல முப்பத்திரண்டு லக்ஷணங்களுடனே
விளங்கா நின்ற பகவானைப்பார்த்து, இந்த அருட்பிரகாசமான
பாலகன்யாரென்றும் இந்த பிலத்துவாரத்திலே யிருக்கிற காரண
மென்னவென்றும் முனீஸ்வரர்களை கேட்க, அந்தமுனீஸ்வரர்கள்
அனுக்கிரகம் செய்கிறார்கள். இந்தச்சிறு பிள்ளையாகிய பாலகன்
பூமண்டலம் முழுவதும் ஆளுகிற நிமித்தமாய் ஸ்ரீமந் நாராயண
மூர்த்தியினுடைய அம்சையினாலே காஸ்மீர தேசத்து ராஜாவா
கிய ஜெயசிங்கு மகாராஜாவின் பத்தினியாகிய நிலர்தமையம்பா

இளஞ்சிற பதிவிரதை கெற்பத்திலுற்பத்தியாகி யே
வந்து வீரபோக வசந்தராயரென்று பேரும் பெற்று வேத முத
லான சகல வித்தைகளும் சம்பன்ன பாஷையும் அப்பியாசஞ்
செய்து கொண்டிருக்கிறார். ஸ்ரீ இராமயோகிஐயரே, நீர் யாரென்
றால் பிர்மா. சிதம்பர தீக்ஷதரே நீர்யாரென்றால் ஸ்ரீ சாம்பசிவன்.
இந்த பூமி பாரந்தீர்க்கும் காரணமாய் பூலோகத்தில் வந்து பிறந்
திருக்கிறீர்கள். இன்னம் கொஞ்சநாளைக்குள்ளே பூமண்டலமெல்
லாம், ஸ்ரீமந் நாராயண மூர்த்தியான வீரபோகவசந்தராயர் துஷ்
டரை சம்மாரம்பண்ணி பஞ்சசதகோடி பூமண்டலமெல்லாம்
ஒருகுடையினகீழ் ஆளப்போகிறார். துஷ்டர்கள் அக்ஷய வருஷத்
திறகுள்ளாக நசித்துப்போவார்கள். புண்ணியவான்கள் அவர்பாத
தெரிசனங்கண்டு மகாபாக்கியம் பெற்று சுகமாக வாழ்ந்து
கொண்டிருப்பார்கள்.

ஆனால் துஷ்டர்கள் எப்படி நசித்துப்போவார்களென்றால்
சொல்லுகிறோம்; அந்தந்த தேசங்களிலே சகலவியாதிகளடைந்து
சிறிதுபேர்கள் நசித்துப்போவார்கள். அதுவுமல்லாமல் அன்னி
யோன்னிய மித்துருவத்தினாலேயும், சத்துருக்களினாலேயும்
சிறிது பேருக்கு அவதியும் பாதகங்களதிகமாகும். அதற்காக
கனக துற்கையம்பாளென்கிற சத்தியானவள் பூமியிலே பிறந்து
உக்கிரங்கொள்ளுகிறாள். அந்த உக்கிரத்தினாலேயும், மலைகளி
னுடைய உச்சியிலுண்டாகும் அக்கினியின் எரிச்சலாலும் சிறிது
ஜனங்கள் நசித்துப்போவார்கள் சிவன் விஷ்ணு ஆலயமுதலான
தேவாலயங்களிலிருந்தும் தேவதைகள் மூர்த்திசொரூபமாயெழுந்
திருந்து அதிக உக்கிரங்கொண்டு அந்தந்தகிராமங்களில் நடன
மாடுவார்கள். அதினாலே பாவிகள் மனச்சஞ்சலப்படுவார்கள்.
மல்லிகார்ச்சுனசுவாமி மனிதர்களிடத்திற்பேசுவார் அப்போது
கல்மழையினாலே சிலபேர்கள் நசித்துப்போவார்கள் காஞ்சிபுரம்
காமாக்ஷியம்பாள் உக்கிரங்கொண்டு தட்சண தேசத்தில் மனிதர்
களையும் குழந்தைகளையும் சம்மாரஞ் செய்வாள். அப்போது
தக்ஷணத்திலுள்ள மனிதர்கள் பாவதோஷங்கள் அதிகமாகச்
செய்வார்கள். அந்தப்பாவங்களைச் சம்மாரஞ் செய்யும் பொருட்
டாய் கதிர்காமதேசத்தில் கரும்பாம்புண்டாகி துஷ்டர்களை நஷ்
டம் பண்ணும் கர்னாடக தேசத்திற்கு காளிகா தேவியும், துலுக்
கர் தேசத்திற்கு லக்காதேவி என்கிற துற்கையும், நாகேந்திர
தேசத்திற்கு முள்ளும், காண்டபருஜ்யத்திற்கு பத்திரகாளியும்,
மத்திம தேசமான தமிழ்தேசத்திற்குவீரபத்திர சுவாமியும், நந்தி
ராச்சியத்திற்கு நாகேந்தரனும் இந்திரபாம்புமாய் அந்தந்த தேவ
தைகள் நாலுதிக்கிலும் உக்கிரரூபங்கொண்டு வருவார்கள் அப்படி
வரும்போழுது துஷ்டர்கள் பெரியோர்கள் சிறியோர்களுடைய

வாய்களிலே இரிஷிகள் விழுந்து தலைமண்டைகள் வெடிக்கும். நின்ற
யிடத்திலே மாளுவார்கள். இந்தப்பிரகாரமாய் ஐநூறு கோடி பூ
மண்டலத்துக்கும் பாம்புகளுண்டாகி பலவிதமாய் சிசுமுதல் விருத்
தாப்பியமுள்ளவர்கள் வரையில் மல்லிகை பூச்சிவிழுந்து நஷ்ட
மாவார்கள்.

அப்போது மந்திரகிரியிலேயும் பூங்காவன முதலான இடங்
களிலேயும் காகம் கூப்பிடும் வித்தைகளதிகமாயிருக்கும், நரிகள்
பிருந்துகள், ஆந்தைகள் நாலு சாமத்திலும் இரவும் பகலும் ஓயா
மல் கூப்பிடும். நக்ஷத்திரங்கள் காணப்படும். லோகத்தில் அநேக
கஸ்திகள் நடக்கும். மேலும் நாலு திக்கிலும் ஆகாசத்திலும் அர
கரா வென்று வெகு சத்தமாய் தொனி பிறந்து திடீரென்று
கேட்கப்படும் அந்த சத்தத்தினாலே சிறிதுபேர்கள் நஷ்டப்படு
வார்கள். ஜலத்திலே இருக்கிற நீர்வாழ் ஜீவஜெந்துக்களெல்லாம்
லோகத்திலே வந்து பிறந்து பூமியிலே சேர்ந்தோம் சேர்ந்தோம்
என்று கூப்பிடும். கைலாசத்திலே யிருந்து ஒரு முதலை வந்து
திவ்வியமான கோவில்களிலே புகுந்து எட்டுநாளிருந்து ஆடுபோல்
கூப்பிடும். மறுபடி மாயமாய்ப்போகும். சத்திகை புலியாய் வந்து
சில துஷ்டர்களைக்கொல்லும் குமாரசுவாமி கோவிலிலே ஏழுநாள்
வரைக்கும் கதவை மூடிக்கொண்டு திறக்காமலிருக்கும். மேல்
காற்று விசையாயடிக்கும், அதனால் சிலதுபேர்கள் நசித்துப்போ
வார்கள். சூரிய மண்டலத்திலேயிருந்து களதள வென்று ஓர்
இடிவிழும் இந்த இடியினாலே ஆரணி வேலூர் நாசமாய்ப்போகும்
வெங்கிடாஜலபதி கோவிலிலே முதலை புகுந்து கூத்தாடும். மேலா
காசத்திலிருந்து ரீங்காரமாய் ஒருசத்தம் பிறக்கும் அந்த சத்தத்
தினாலே லோகத்திலே யிருக்கிற ஜனங்களெல்லாம் நடுநடுங்குவார்
கள். தேவாலயங்களிலிருக்கிற கெருடத்துவஜங்களெல்லாம்ஒடிந்து
நாலுதிக்கிலும் சிதறி விழும். திருவாலூர் வீரபாகு சுவாமிக்கு
வேர்வையாகும். அப்போது ஜனங்களெல்லாம் நஷ்டப்படுவார்கள்
மல்லிகார்சுன சுவாமிநேத்திரத்திலே நெருப்பாகும். அப்போது
வானம் கடகடவென்று கூப்பிடும் அதனாலே ஆகாசதேவதைகள்
வாக்கினாலே சத்தம் பிறந்து சிறிது ஜனங்கள் நஷ்டமாவார்கள்.
சிவன் சடைமுடி அவிழ்ந்து வீசி எட்டுநாட்கழித்துத் தரணியிலே
விழும். அதனாலே சில ஜனங்கள் நஷ்டமாவார்கள் திருப்பதி
வெங்கடாஜலபதி சுவாமி கோவிலிலே மகாலெக்ஷிமி புகுந்திடுவாள்
அவள் மாய்கை வசத்திலே சிம்மம் பிறந்து ஜெகமெங்கும் நடு
நடுங்கும். சிறிது பாஷாய் மடிந்து பூமியிலே நாலு திக்கும் ஆளுக்
கும், திருவள்ளுவராகப்பிறந்து அவருக்கு வேர்வையாகி அதனா
லே சிறிது ஜனங்கள் நஷ்டமாவார்கள். லெக்ஷிமிதேவி கண்களி

லிருந்து ஜலம் வடியும் வினாயகர் வேதமந்திரம் புண்ணிய பாராயணம் பண்ணுவார் வினாயகருடைய சரித்திரத்தை எங்கும் வாசிப்பார்கள் மேலும் ஸ்திரீ ஜாதிகள் ஜலகரீடை மிகவும் செய்து ஜலத்திற்குள்ளே காலாட்டுவார்கள், அந்த ஜலக்ரீடையினாலே ஸ்திரீகளினுடைய கண்கள் இரத்தம்போல் சிவக்கும். ஓய் இராமயோகி ஐயரே சிதம்பர தீக்ஷதரே கேளுங்கள் மேலும் சமஸ்தமானபேரும் வீரபிர்மத்தினுடைய சரித்திரத்தை கேட்க மிகவும் இச்சித்திருப்பார்கள். அமாவாசை நாளிலே ராத்திரி பூரண சந்திரன் உதயமாகும். அதனாலே சிலதுபேர்கள் நசித்துப் போவார்கள் ராத்திரியில் சூரியன் உதயமாகும் ஆகாசம் சிற்பியாகும் பின்னும் ஆகாசம் செம்மானமிடும் அப்போது பெரியோர்கள் புண்ணிய புருஷர்கள் அஷ்டதிக்கு மந்திரங்களைத் துதிசெய்வார்கள் பட்டணங்களிலேயும், ஊர்களிலேயும் வனாந்ரங்களிலேயும் ரத்தமழை பெய்யும் அதனாலே சிலதுபேர்கள் நசிப்பார்கள். பட்டணவாசல்களிலேலட்சுமி தேவிதுக்கித்தழுவாள். அப்போது சமுத்திரங்களுமபொங்கும் அதனாலே துஷ்டர்கள்முதலானவர்கள் நஷ்டமடைவார்கள். வீரபிர்மம்வந்தனரோவென்று மனிதர்களுக்குக் கேட்கும்படியாய்பூமிதேவிசொல்லிவாழ்த்துவாள் பூலோகத்திலே முன்யுகங்களிலே எந்தப்பிரகாரம் சத்தியமாய் நடந்ததோ அந்தப்பிரகாரம் சீமைகளிலேசத்தியத்துடனேசகல ஜனங்களும் சம்பத்துவான்களாகி தர்ம நீதியாய் வாழ்ந்திருப்பார்கள் இராமயோகி ஐயரே சிதம்பர தீக்ஷதரே இந்த பாலகுமாரனாகிய வீரபிர்ம்மம் இவ்விடம் வந்து ஆறுமாதமாயிற்று. இன்னம் மூன்று மாதம் இவ்விடத்திலிருந்து அப்பால் கேதார வனத்திற்குப்போய் அவ்விடத்திலிருந்து ஸ்ரீ சாம்பசிவமூர்த்தியைப் பூசித்து இரண்டு வருடம் தவஞ்செய்து சிவனிடத்திலே மூன்று வரங்கள் பெற்றுக்கொண்டு குரோதன-௵ சித்திரை-௴ சுத்த பௌர்ணமி வியாழக்கிழமை இந்த சுபதினத்திலே இந்திரகிரி பர்வதத்திற்குப் போய் அவ்விடத்திலிருக்கிற மகாத்மாக்களையும் முனீஸ்வரர்களையும் தெரிசித்து அவர்களுடைய அநுமதியும் பெற்றுக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஸ்ரீகைலாச பர்வதத்திற்குப்போய் மல்லிகார்ச்சுன சுவாமியையுங்கண்டு தெரிசித்து அவர்களுடைய அநுமதியும் பெற்றுக்கொண்டு கார்த்திகைவீரர் அர்ச்சுனன்கையில் கங்கணகடகம் வாங்கிக்கொண்டுபோகா நாடெங்கும்போய் அவருடைய தரிசனம் பெற்றுக்கொண்டு பெரியவாடை யென்னும் ஊருக்குப்போய் அவ்விடமிருக்கப்பட்டவர்களை தன் கைவசப் படுத்திக்கொண்டு கெங்காதீரம் போய்ச்சேர்ந்து அவ்விடத்திலிருந்து தர்மராஜாக்களுடைய சிம்மாசன முத்திரையையுங் கைக்கொண்டு துஷ்டர்களை சம்மாரஞ்செய்து அக்ஷய வருஷம் போன

வுடனே பிரபவ வருஷமுதற்கொண்டு ஏக்சக்ரசிம்மாசனமுதலாக இராச்சியபரிபாலனம் செய்யவருவார். அப்போது நாங்களும்கூட வருவோம். இவர் ராச்சியபரிபாலனம் செய்யுப்போது மாதம் மூன்றுமழை பெய்யும். பயிர்கள் செம்மையாய் விளையும். தர்மநீதி மிகுதியாய் நடக்கும். ஜனங்கள் பாக்யவான்களாய் தர்மசிந்தையோடு வாழ்ந்து கொண்டிருப்பார்கள். ஓய் இராமயோகி ஐயரே சிதம்பர தீக்ஷதரே, இது சங்கதிகளெல்லாம் எங்களுக்கு ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தி போதித்தபடியினாலே நாங்கள் உங்களிடத்தில் சொன்னோம் நீங்கள் எங்குமில்லாத புதுமை கேழ்விப்பட்டீர்கள். இதுகளை நீங்கள் ஓயாமல் பூலோகத்திலே சகலமான ஜனங்களுக்குமறிவித்து எழுதியனுப்பி பிரசங்கங்கள் செய்யுங்களென்றும் அந்தகாரத்திலே பூமியிலுள்ள சகல ஜனங்களுக்கும் இந்தப்பிரகாரம் தெரியப்படுத்தினால், தரித்திரவான் வாசலிலே பொன்மாரி பொழிந்தால் எவ்வளவு மகிழ்ச்சியுண்டாகுமோ அவ்வளவு தூரம் சந்தோஷத்துடன் பூமியிலுள்ள புண்ணியபுருஷாளும் தரிசனத்துக்குஇருப்பார்கள். பிர்மக்ஷத்திரிய, வைசிய சூத்திர இந்தநான்கு வருணத்தாரும் அவரவர்களுடைய முறைதப்பாமல்சந்தோஷமாக இருப்பார்கள் என்று அந்த மகாத்துமாக்களாகிய முனீஸ்வரர்கள் எங்களுக்குத் திருவுளம்பற்றினார்கள். சிதம்பர தீக்ஷதரும். இராமயோகிஐயரும் சொன்ன வார்த்தைகள் உள்ளபடிதான் என்றெண்ணி நடக்கிற பேர்களுக்கும் பத்திரிகையைவைத்து பூசைபண்ணியவர்களுக்கும் ஆயுசுபரியந்தம் ஆரோக்கியமும் கனதன வஸ்துக்களும் வாகனாதிகளும் பெற்று சுகமாயிருப்பார்கள்.

இதை எழுதாமலும், படிக்காமலும், படித்ததைக் கேட்காமலும் அசட்டையாகி இகழ்ச்சிசெய்தபேர்களுக்கும்; துஷ்டபாவிகளான ஜனங்களுக்கும் அச்சயவருஷத்திற்குள்ளாக அதமாய்ப்போகும்படியாய்க்கஷ்டங்கள் சித்திக்கும், அவர்கள்வாயிலே கிருமிகளுண்டாகி அதினாலே அவதிப்பட்டுப் புண்ணியத்திற்குள்ளாகாமல் பாவத்திற்குள்ளாகிப் போவார்கள்.

181876.

இதுவுமல்லாமல்கண்டனைதண்டனைசெய்யகனகதுற்கையம்பாள் விசாரிக்கவருகின்றாள். அதினாலேயும் சனங்கள் அதமாய்போவார்கள். சிதம்பரமூர்த்தியே. இராமயோகி ஐயரே. நீங்களிவ்விடத்திவிருக்கப்பட்ட மகிமைகளெல்லாம் பார்த்தீர்களே இனிமேல் நீங்களிருவர்களும் தங்களுடைய ஆச்சிரமத்திற்குப்போய் அவ்விடத்திவிருந்து பூலோகத்திலிருக்கப்பட்ட ஜனங்களுக்கெல்லாந்தெரியத்தக்கதாக மேலே சொல்லிய விபரங்களைக் குறித்து பத்திரிகையெழுதி அந்தந்ததேசங்களுக்கு அனுப்பிவித்து இனிமேலாகிலும் பாவங்களைச் செய்யாமல் மேலான தர்மங்களையும், புண்ணியங்

ளையுந் தேடிக்கொள்ளும் படியாய்த் தெரிவியுங்கள். பூலோகத்திலே துஷ்டர்களதிகரித்தபடியினாலே அவர்களை தண்டனை பண்ணவேண்டிய நிமித்தமாய் போஜராஜாவினண்டையில் சத்தியாகிய கனக துற்கையம்பாள் உற்பத்தியாயிருக்கின்றாள் ஆனகால் நீங்கள் அந்த கனகதுற்கையம்பாளையும் பத்திரிகையிலெழுதி அந்தந்த தேசங்களுங்கு அனுப்பிவித்து அதற்கனுகூலமாய் நீங்களுமிருந்து துஷ்டர்கள் முதலான பேர்களையுந் தண்டனை பண்ணி அறியும்படியாய்ச் செய்வியுங்களென்று முனீஸ்வரர்கள் ஆக்ஞாபித்தபடியினாலே நாங்கள் அவர்களனுமதியைப்பெற்றுக் கொண்டு எங்களாச்சிரமத்திற்குவந்து பூலோகத்திலிருக்கப்பட்ட புண்ணிய புருஷர்களுக்குத்தெரிய வேண்டிய நிமித்தம் இந்தப் பத்திரிகையை எழுதி அனுப்பினோம் அதை அந்த மச்சதேசத்தைத் துரைதனஞ்செய்யப்பட்ட துஷ்டாத்மாக்கள் கண்டுஎங்கள் பேரிலே சிற்றம்கொண்டு நீங்கள் ஆங்காரமாய் முடிவு காலம் வந்ததென்று பிரபல்யமாய் எழுதவேண்டிய தென்னவென்றும் இந்தப் பத்திரிகையை எழுதினவர்கள் யாரென்றுகேட்டு எங்களைப் பிடித்துக் கொண்டுவரச்சொல்லி சிலதூதர்களை எங்களாச்சிரமத்திற்கு அனுப்பினார்கள். அந்த தூதர்கள் எங்களையழைக்க நாங்களும் நிஷ்டையிலே பார்த்துக்கொண்டு அந்ததுஷ்டர்கள் மெத்தத் தூரிதமாயிருக்கிறார்களென்று தெரிந்து இவர்களுடன் பேசலாகாதென்று அவர்களோடுபோனோம். அந்ததுஷ்டர்கள் எங்களைக் கண்டமாத்திரத்திலே, நீங்கள் யார்? இந்தப்பிரகாரமாக ஏன் எழுதினீர்கள்? இந்தகலியுகத்துக்கு நீங்களா தெய்வம்? கெடுவுவைத்தெழுதவேண்டிய காரியமென்னவென்று கேட்டதற்கு, நாங்கள் எங்களுக்கு ஸ்ரீசாம்பசிவமூர்த்தி பிரசன்னமாகிவந்துசொன்னபடியினாலே இப்படிக்கு எழுதியனுப்பிவைத்தோமென்று சொன்னோம் அந்தப்படிக்கு தங்களிடத்தில்ஸ்ரீசாம்பசிவமூர்த்திபிரசன்னமாகியிருந்தால் ஒருசோதனைபார்க்கிறோம் அதற்குநீங்சள் நின்றால் எங்களுக்குத்தெய்வந்தானென்று சொன்னார்கள். அதற்கு நாங்கள் உங்கள்மனதிற்கு எப்படி செய்யவேண்டியதோ அப்படி செய்யலாமென்று சொன்னோம்.

அதற்குமேல் அந்த துஷ்டர்கள் கருமருந்தையெடுத்து ஜோடி பீரங்கியில் செலுத்தி குண்டுபோட்டு கெட்டித்து எங்களை ஷடி பீரங்கியெதிரே நிறுத்தி. இனி உங்களுடைய மகத்துவத்தைப் பாருங்களென்று ஷடி பீரங்கியிற் தீயைக்கொளுத்தினார்கள். அப்போது இரண்டுகுண்டுகளும் அக்கினிமயமாயெழும்பி எங்கள்கையிலே வந்திருந்தது. அதை மேற்படி துஷ்டர்கள் கண்டு நடுநடுங்கி திகிலெடுத்து இவர்கள் எழுதினபடி நடக்குமென்று யோசித்து வணங்கி விலகிப்போய் நின்றார்கள். இந்தச்சமயத்திலே மகாமுனீ

ஸ்வரர்களும், மகா சித்தர்களும். மகா யோகிஸ்வரர்களும் பிரசன்னமாகி வந்து ஓய் சிதம்பர தீக்ஷதரே, இராமயோகி ஐயரே, உங்களே இந்த துஷ்டர்களுக்கு பகவானென்றும்கர்த்தாவென்றுந்தெரியாமல் இந்த துஷ்டர்கள் மதத்தினுலே இத்தனே இம்சைப்பண்ணினூர்கள். இவர்களுக்கு ஆகாதகாலம் சம்பவித்துக்கொண்டபடியினுலே இந்தத் துர்ப்புத்திவந்ததென்று சொல்லிப் போய்விட்டார்கள். ஆகையால் அக்ஷயவருஷம் போனதின்பிறகு பிரபவ வருஷம் முதற்கொண்டு வீரப்பிர்மம் பூமிக்கு அதிபதியாக இராஜியபரிபாலனஞ் செய்ய வருகிருர் அப்போது உங்களுக்கு அந்த விருத்தாந்தம் இன்பமாய் பகவத் தர்மசிந்தனையாக விருக்கும் புண்யபுருடர்களுக்குத் தெரியும்படியாக, மகா முனீஸ்வரர்களும் மகா சித்தர்களும் ஆக்ஞாபித்தபடி, நாங்கள் தேசத்திற்கு எழுதி அனுப்பி வைத்திருக்கிறோம். அப்பாலுண்டான இரண்டாம் பத்திரிகை புண்ணிய புருஷர்களுக்கும் சிவசிந்தனையாயிருக்கப்பட்ட சிவனடியார்களுக்கும் நேத்திரானந்தத்திலே எரிவுகண்டு இரத்தம் பிறக்கும். இதற்குப்பிரதி எழுதிக்கொண்டு பூசைபண்ணினபேர்களுக்கு மனதிலே எந்தக்காரியத்தை நினைத்துப்பூசைசெய்கிருர்களோ அந்தக் காரியம் அவர்களுக்குச் சித்தியாகும். ஆகையால் இதை உள்ளபடிதானென்று நடக்கிறபேர்களுக்கு மகா தர்ப்பணம் பண்ணின பலன் பிறக்கும். இதற்குப்பிசகில்லே. மேற்கண்டபடிக்கு பிரபவ வருடத்தில் வீரபிர்மம் அவர்கள் வந்து இராஜ்ஜியபரிபாலனம் பண்ணுவார்கள் இந்த பத்திரிகையை நிச்சயமென்றெண்ணி நடக்கவேணும். நாங்களிரண்டுபேரும் தேசங்களுக்கு பிரவேசிக்கிறோம் இந்தபத்திரிகையையார்கொண்டுவந்து கொடுக்கிருர்களோ அவர்களுக்கும் வாசிக்கிறவர்களுக்கும்ஜோடி வஸ்திரமும் சொர்ணபுஷ்பமும் கொடுத்தால் அவர்களுக்கு இரட்டிப்பு தங்கள் வீட்டில் உற்பத்தியாயிருக்கும்படியாய் ஸ்ரீ சாம்பசிவமூர்த்தி கட்டளை பண்ணுவார்.

இதை எழுதினபேரும் வாசித்தபேரும் கேட்டோரும், நிச்சயமென்றெண்ணிப் பூஜித்தபேரும், இந்த பத்திரிகையை நம்பினபேரும் இவர்களெல்லோரும் தீர்க்காயுசுடையவராயும் அற்பாயுசுக்காரராயிருந்தாலும் நாங்கள் வருகிறமட்டும் சுகமேயிருப்பார்கள் மேற்கண்டபடி போற்றுபவர்களே எமன் அணுகவும், எமன் கோட்டாலே செய்யவும் கூடாது. சகலசம்பத்துகளும் உண்டாகியிருக்கும் சாம்பசிவ முர்த்தியே துணேசெய்வார். விதர்ப்பதேசத்தைச்சேர்ந்த மல்லிகார்ஜுன புரத்திலிருக்கும் அருணுசலம் செட்டியானவர் கப்பல்வியாபாரங்கொண்டு கடலேறிப் போகிறபோது கப்பலேசுழற்காற்று தள்ளிக்கொண்டுபோய் ஒருதிசையில் தள்ள தண்ணீர் கடலேற்றும் புட்பகதீவிர்க்கப்பாலே போய்ச்

சேர்ந்திருக்கிறபோது அந்த புட்பக தீவிலே முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரங்கோடி ரிஷிகள், கணநாதர்கள் முனிவோர்கள், தும்புருநாரதர்களுள்ளே அனந்தங்கோடிசித்தர்கள் முதலானபேர்கள் திருச்சபை கூட்டமாக தம்பூரு, வீணை, சரமண்டலம். சங்கு, ஜெயகண்டி, ஜெகநாதங்கள், தேவதுந்துமிகள் முழக்கமாக வேத வாக்கியத்துடனே பாரிஜாதபுஷ்பம் காதவழிக்கு கமகமவென்ற வாசத்துடனே, ஆரவார சத்தத்துடன் சமுத்திரமுழக்கம்போல் "அரஹரா" வென்கிறசப்தமும் "ஹரி ஓம் நமநாராயண" வென்கிற சம்தமும்தொனிக்கப் பரிபூரணகடாக்ஷகிருபையுடனே சம்பரமமாயிருக்கிற வேளையில் அந்தயோகீஸ்வரர்களிலே ஒருவர் இந்தக்கப்பல் அருகாமையில்வந்து நின்றுகொண்டு அது யாரடா கப்பற்காராவென்று கேட்க, அப்போது அருணாசலஞ்செட்டி சென்னது: சுவாமி! அடியேன் விதர்ப்ப தேசத்திற்குச்சேர்ந்த மல்லிகார்ஜுனபுரத்திலிருக்கும் வைசியகுலம் அடியேன் பெயர் அருணாசலம் செட்டியென்று சொன்னபோது அந்தயோகீஸ்வரர்சொல்லுவார்; அடமானிடவா நீஇங்கே வரவொண்ணாதே என்றபோது அந்த அருணாசலஞ்செட்டி யோகீஸ்வரரைப்பார்த்து சுவாமி அடியேனுடையகப்பலை சுழற்காற்று இங்கேகொண்டுவந்து விட்டதென்று சொன்னான் அப்போது அவர்சொன்னது வந்தபடியே கப்பலை ஒட்டிக்கொண்டுபோ உன்னிடத்தில் ஒருகாரியமும் சொல்லப்படாதென்று யோகீஸ்வரர் சொல்ல, அவரை இந்த அருணாசலஞ்செட்டி மிகவும் பயபக்தியாக வணங்கி, சாஷ்டாங்கமாக தெண்டனிட்டு கேட்க, யோகீஸ்வரர் ஒரு வசனம் திருவுளம்பற்றினார்.

இந்த புஷ்பக தீவிலே திருமூர்த்திகளும், தேவர்களும் இருக்கிறவிடத்திலே நீ கால்நாழிகை தரிக்கப்படாது. சாபம் வந்து சித்திக்கும். அது எதினாலென்றால் பரமாகஸ்யம் சொல்லப்பட்ட இடம் ஆனால் நீ இவ்விடத்திற்கு வந்ததே முன் பூர்வஜென்மத்திலே வைசியர்குலத்தில் புண்ணியபுருஷனாயிருந்தபடியினால் உன்னிடத்தில் உள்ளகாரியஞ் சொல்லப்படுமென்று யோகீஸ்வரர் உள்ளமகிழ்ந்து கனிவாய்திறந்து திருவுளம்பற்றியருளிய திருவுள பிரசாத மென்னவென்றால்,

இக்கலியுகத்தில் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய சூத்திரரென்கிற குலாச்சாரந்தப்பி அவரவர்கள் வேதமார்க்கமுந்தப்பி மாதா பிதாகுரு வென்கிற சத்தியமுந்தவறி குரு சிஷ்யனாகவும் சிஷ்யன் குருவாகவும் இராஜா சேவகனாகவும் சேவகன் ராஜாவாகவும் புருஷன் பெண்ஜாதியாகவும் பெண்ஜாதி புருஷனாகவும், பொய் மெய்யாகவும் மெய் பொய்யாகவும், அவசத்தியம் அனியாயம் கொலை களவு காமம் குருத்துரோகம் முதலிய பஞ்சமாபாதகங்கள் மிகுந்து உலகமெல்லாம் சமன் மூடிப்போயிருக்கிறதினால் பூதேவி பாபத்தைச் சுமக்கமாட்டாமல் ஸ்ரீமகாவிஷ்ணுவினிடத்தில்முறையிட அன்னவளின் பாரத்தை குறைத்து துஷ்டநிக்கிரஹ சிஷ்ட பரிபாலனம் செய்வதன் பொருட்டு ஸ்ரீ மகாவிஷ்ணு வீரபோக வஸந்தராயரென்னும் ஸ்ரீமத் வீரப்பிரம்மமாகவும் பிரம்மதேவர் ராமயோகியாகவும்; சிவபெருமான் சிதம்பர தீக்ஷகராகவும் அவதாரமாகி துர்க்கையம்பாளைவிட்டு துஷ்டர்களை கொள்ளைக் காய்ச்சலினாலும் வாந்திபேதியினாலும் வைசூரியினாலும் பிளேக்கினாலும், அக்கினியினாலும், வெள்ளத்தினாலும் கலகங்களினாலும் சங்காரஞ்செய்து வருகிறார்கள். அக்ஷய வருடம் முடிந்து பிரபவ வருடந்தொடங்கி ஸ்ரீமத் வீரப்பிரம்மமே பூலோகமெல்லாம் ஒரு குடையின் கீழாக ஆறிலொரு கடமைகொண்டு அசையாமணியுங் கட்டி செங்கோல் செலுத்தி ஜெயம்பெற்று வாழ்வார்கள் அப்போது மாதம் மும்மாரி பெய்யும் புலியும் பசுவும் ஒருதுறையில் நின்று தண்ணீர் குடிக்கும் ஆயிரத்தெட்டு சிவாலயங்களும் நூற்றெட்டு திருப்பதியும் பிர்மாவாலயங்களும் அன்ன சத்திரங்களும் வீரசிம்மாசனத்திற்குடைய பஞ்சமகுடத்திற்குச் சேர்ந்த அறுபத்துநாலு சிம்மாசனாபதி யடங்கலும் மென்மேலும் விருத்தியாகி நன்றாய்விளங்கும். அப்போது புண்ணிய புருஷர்களாயிருக்கிற பேர்கள் சுவாமியார் பாதாரவிந்தம் தரிசனங்காண்பார்கள். இச்சங்கதியைப் பூமியெல்லாம் அறியப்படுத்தி வையென்று சொல்லி விட்டு மாய்கையாய் திருக்கூட்டத்தில் போய்ச்சேர்ந்தார்

பிற்பாடு அருணாசலஞ் செட்டியானவர் கப்பலை நடத்திக் கொண்டு வெகுநாளைக்குப்பிறகு மல்லிகார்ச்சுனபுரத்திற்கு வந்து

சேர்ந்தார். அப்போது இந்த வர்த்தமானங்களெல்லாம் விதர்ப்ப தேசத்து ராஜாகேட்டு அருணாசலஞ் செட்டியாரை வணங்கி வேண்டி சந்தோஷம பண்ணித் துதித்து சுகமே இருந்தார்கள்.

இதுசேதியை தேசதேசங்களுக்கு எழுதி அனுப்பிவைத்து தானும் அந்த தேசத்தாரும் சோமவாரம் விரதமிருந்து சுவாமி பத்திரிகையை வைத்து அர்ச்சனை பண்ணிவருகிறார்கள்: இந்தப் பத்திரிகையை பொய்யென்று சொன்னபேர்களும், இதைஇகழ்சி செய்தபேர்களும் கெங்கைக் கறைசிலே காராம்டசுவையும், மாதா பிதா, குருக்களையுங் கொன்றதோஷத்திலே போவார்கள். இதை மெய்யென்று மனதிலெண்ணி பூசை அர்ச்சனை செய்தபேர்கள் லோகாக்ஷகராகிய ஸ்ரீ வீரபிர்ம்மத்தினுடைய பாதாரவிந்தம் பெற்று சல சம்பத்துடனே வாழ்ந்திருப்பார்கள் இது நிச்சயம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## ஸ்ரீ வீரபோக வசந்தராயநம:

ஸ்ரீ காரண வஸ்துவாகிய பாத்துவாச ரிஷியினுடைய ஆச்சிரமத்திலிருக்கும் ஸ்ரீ வீரப்பிர்மம் அவர்கள் திருமுகம்; சுவாமி சாஸ்திரியாருகிய மகாநாராயண சிம்மாச்சாரியார்விகாரி ஹுபிறந்த பலன்களுக்கும் மஹாசாஸ்திரியார் ஸ்ரீ ஜோசியர் அவர்களுக்கும் சகலலோக பிரபஞ்சத்திற்கும் என் சம்மதியாக எழுதி யனுப்பிவித்த நிருபம் துந்துபி ஹு வைகாசிமீ 13உ குருவாரம் பூராட நட்சத்திரம் திரயோதசி கூடின சுபயோக சுபதினத்தில் பாத்துவாசருடைய ஆச்சிரமம் போய்ச் சேர்ந்தோம். அங்கே அனேகமான வனங்களுண்டு அந்தவனத்திலே மகா முனீஸ்வரர்களும், சித்தாதிகளும் இருந்தார்கள். அவர்களைக்கண்டு தரிசனம்பண்ணினோம். அவர்களருகாமையிலே பதினேரு வயதுள்ள குமாரனாகிய மகாமூர்த்தியாய் விளங்கியிருக்கிறாரே அவர்யாரென்று கேட்டதற்கு அங்கேயிருக்கும் மகாத்துமாக்கள் சொன்னது, இந்த பாலகுமாரன் பிரபவ வருஷத்திலே பூமியாளுகிறதற்கு

ஸ்ரீமந் நமோ நாராயண மூர்த்தியினுடைய அம்சையுடைய வராக யிருக்கிறார். காஸ்மீரமென்கிற மகாதேசத்திலே ஜெய சிங்கு என்ற க்ஷத்திரிய ராஜாவினுடைய தேவியானவள் மகாசௌந்தரிய சௌபாக்கியத்துடனே மகா பதிவிரதையாக விருக்கின்ற திலர்த்தமையம்பாள் வயற்றிலே உற்பத்தியாகிப் பிறந்தவர் இந்த புண்ணிய புருஷர். அதர்வண வேதமுதலான சாஸ் திரவித்தைகளுங்கற்றறிந்தவர். அவரிவ்விடத்திலே மூன்றுவருஷ மிருப்பார். அதற்கப்பால் கேதாரவனத்திலே இரண்டுமாதம் அன்னம்புசிக்காமல் தபசுபண்ணி ஸ்ரீ சாம்பசிவ மூர்த்தியினு டைய அநுக்கிரகத்தை யடைவாரென்றும், பின்னும் மூன்று வரங்கள் வாங்கிக்கொண்டு அங்கேயிருந்து குரோதன வருஷ சித்திரைமீ பூர்வபட்சமும் குருவாரமுங்கூடின சுபதினத்தில் இந்திரநீலபர்வதத்திற்குப் போய் அங்கேயிருக்கிற மகாமுனீஸ் வரர்களைக்கண்டு தரிசனம் பண்ணிக் கொண்டு அவர்களண்டை யில் காத்திருந்துசிறிதுவரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொண்டு தெய்வமந்திரங்களை உபதேசம்பண்ணிக்கொண்டு மல்லிகார்ச்சுன சாமியைக்கண்டு தரிசனம் செய்து அவரண்டையில் சிலநாள் கழித்து துற்கையினிடத்தில் அநுமதிபெற்றுக்கொண்டு தங்கள் வம்சத்தாராகிய தருமராஜாக்கள் பட்டினத்திலே போட்டிருக்கிற திரவியங்களைக் கைவசப்படுத்திக்கொண்டு சிம்மாசனமும் கை கொண்டு இந்திரகிரி பர்வதத்தின் அடிவாரத்திலே யிருந்து கலியாபுரம் வரையிலும் அநந்த நகரங்கள் விளங்க உண்டுபண்ணி அக்ஷயவருஷ முடிந்தபின் பிறகு பிரபவவருஷ முதலாக துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனம் பண்ணிக்கொண்டிருப்பார்கள். அப்போது சீமையிலே சுகசோபன கலியாணமாகயிருப்பார்கள்.

மாதமூன்றுமழை பெய்யும் பிராம்மணர்களுக்கெல்லாம் நித் திய தருமங்கள் சகலமும் தாழ்சி யில்லாமல் நடக்கும். சிலராஜாக் கள் சண்டை பண்ணுவார்கள். சண்டைபண்ணினபேர்கள் சேதப் பட்டுப்போவார்கள் போனவர்கள் போக இருக்கிரவர்களும் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் நித்திய சுப சந்தோஷமாக இருந்துவாழ்வார்கள் இந்தபாலகுமாரன் ஸ்ரீ ஹரிஓம் நமோநாரா யணமூர்த்தியாகிய ஸ்ரீ கிருஷ்ண அவதாரசித்தியாகிய ஸ்ரீவீரபிர்

மம் அவர்கள் பிரசந்திருக்கிறுர்கள். ஜெகத்திலே மகாபிரபல்யமாய் நடக்கும் அவ்ருடைய மகிமையை பூலோகத்திலே சொல்லமுடி யாது இதுநிச்சயம் இதிற் சமுசயமில்லை இந்த சுவாமியாருடைய வாக்கியத்தை யாராவது வாசித்து எழுதி பிரபல்யம்பண்ணின பேர்களுக்கு ஸ்ரீ சாம்பசிவமூர்த்தி அனுக்கிரகத்தினுலே பூரண ஆயுசுடையவராய் சகலசம்பத்தும் பெற்று வாழ்ந்திருப்பார்கள் இந்தமகிமையைப் பார்த்து எழுதாமல் மாறினுலும் பிரபல்யமா ய்ச் சொல்லாமற்போனுலும் மகத்தாகிய பிர்மஹத்திதோஷத்தை யடைவார்கள். அப்படி வாராதபடிக்கு இந்த பூமியின் கண்ணே யாரொருவர் எழுதிவைத்துக்கொண்டு அதற்கு மறுபிரதி சீர்மை களுக்கு அனுப்புவித்தார்களோ அவர்கள் தீர்காயுசும் அஷ்ட ஐஸ் வரியமும் பெற்றிருபபார்கள். இன்னும் அவர்களுக்கு என்ன பதவியென்றுல், மகாமுனீஸ்வரர்களுக்கு மோக்ஷ உபசார ஸ்தோ த்திரம் பண்ணினுல் எவ்வளவு பலனே அவ்வளவுபலனிலும் அதி கமான பலன்பெற்று வாழ்ந்திருப்பார்கள் இந்தச்சரித்திரம் எவ ரண்டையிருந்தாலும் அவர்கள் காரியம் அனுகூலஜெயமாகும்.

ஓம் ஸ்ரீ வீரப் பிர்மம் நமஸ்து:

சுபம்! சுபம்!! சுபம்!!!

காலக்கியானம் முற்றிற்று.

---


# கந்தன்

அல்லது

## கடன்பட்டவன் கதை.

உலகிற் பிறந்த மானிடர்கள் ஒவ்வொருவரும் அவசியம் வாசி த்துத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமடங்கியது. இதைவாசி த்தபிறகு யாரும் கடன்படத்துணியார் என்பதுநிச்சயம். மேலும் சோம்பேரியாகத்திரிவதினுலும் தாசிவீட்டிற்குச்செல்வதினுலும் கடன்படுவதினுலும் உண்டாகும் கெடுதிகள் முதலியபல அறிய விஷயங்களைத் தெளிவாக எளிய நடையில் எழுதப்பெற்றுள.

இதன் விலை அணு 0—3—0

த. கிருஷ்ணபிள்ளை அன் பிரதர்

புத்தகவியாபாரம் மதுரை.

வெளியாகிவிட்டன... ... வெளியாகிவிட்ட

# சந்தச்சரபம் சண்முகதாஸ் அவர்களால்

## இயற்றப் பெற்ற நூதன புத்தகங்கள்.

## பக்திபானந்தக் கேலிப் பதங்கள்

### இரண்டாம் பாகம் விலை அணா 0—6—0

திருமயிலம் பெருநூலாசிரியர் ஸ்ரீலஸ்ரீ தணிகாசலச் சுவாமி யவர்கள் திருவாய் மலர்ந்தருளிய முகவுரையுடன் கூடியது.

நேயர்காள்!

பக்திநெரியாப் பாமரரும் இதைவாசிப்பின் இதிலடக்கியுள்ள அகசியக்கீதங்களிலீடுபட்டு ஒவ்வொருகீதத்தையும் இடைவிடாது பாடிப் பாடிக் கடவுளரின் திருவடிக் காளாசவர்களெனின் இப்புத்தகத்தைப்பற்றி இன்னமும் விவரித்துரைக்கத் தேவையோ? எல்லாம் அகசியக்கீதங்கள்! நிந்தாஸ்துதிக் கீதங்கள்! பாடப் பாடப்பரவசமூழுந்தும் ஓயாச்சிரிப்பைதரும்.

## மன்மதன் எரிந்தகட்சி கேள்விலாவணி

### முதற்பாகம் விலை அணா 0—6—0

### இரண்டாம்பாகம் அச்சிலிருக்கிறது:

இதில் மன்மதன் தேவசபைக்குச் செல்வது முதல் எரிந்து சாம்பலாகும் வரை அவனது சரித்ரமும், இரதி புலம்பலும், எதிர்கட்சியாருடன் வாதாடும் பற்பல கடினமான கேள்விகளும் தற்கால நாகரீக வர்ண மெட்டுக்களில் நன்கமைந்திருக்கின்றன ஒருமுறை புததகத்தைப் படித்துவிடின் திரும்பவும் பன்முறைகள் படிக்கச் செய்யுமென்பது திண்ணம்.

## போட்டா போட்டி கள்ளபாட்டு

### முதற்பாகம் விலை அணா 0—2—0

### இரண்டாம் பாகம் அச்சிலிருக்கிறது

இரண்டு கள்ளர்களின் சாமார்த்தியப்பாடல்களும் தர்க்கங்களும் அதிநேர்த்தியாயடங்கியுள்ளன விலை அணா 0–2–0

மஹாத்மா காந்தி தியானம் 1, 2, 3 பாகங்கள் அணா 0–2–0

சிறுத்தொண்டன் டிராமா (சரித்திரம்) 0—4—0

ந. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,

புத்தக வியாபாரம், மதுரை.

முத்தமிழ் க்ஷேத்திர வித்துவாத்தினம்

# A. S. சதாசிவதாஸரவர்கள் எழுதிய

# பார்ஸி சாவித்திரி சத்தியவான்

## முதற்பாகம் & இரண்டாம் பாகம் விலை அணா 0—8—0

இதில், கலிங்கதேசத்தரசன் ராஜதர்பாரில் தேச விசாரணை சால்வபுரியரசனுடன் போர்புரிந்து நாட்டைக் கைப்பற்றும் சமயம் பாடும் வீரவேச பாடல்களும் வசன சாதுர்யங்களுஞ் சாவித்திரி சத்தியவான் தர்க்கங்களும் எமராஜன் தர்பார், சண்டாளர்களுக்கு இடப்படும் தண்டனைகள் ஷெியார் புலம்பலும் சத்தியவான் உயிர் நீங்கும் சமயம் பாடும் சோகரச பாடல்களும் சாவித்திரி தன் பதிவிரதா சக்தியால் எமராஜனுடன் பின் தொடர்வதும் தர்க்கமும் கணவனின் உயிர்மீட்கும் பாடல்களும் வசனங்களும் படிக்கப்படிக்க உருக்கமாகவும் இன்பமாகவுமிருக்கும் இதில் இடத்திற்கு தக்கவாறு அமைத்துள்ள புதிய வர்ணமெட்டு பாடல்களின் பெருமையும் வசன சாதுர்யங்களினருமையும் படித்த கனவான்கள் இவராலியற்றிய இன்னும் பற்பல பாடல்களையே படித்துணரவாய் மடுப்பாரேயன்றி பிறர்பாடல்களில் இச்சைகொள்ளாரென்பதற்கு இப்புத்தகத்தை வாங்கிப் படிக்கும்பொழுதே உண்மை விளங்கும்.

### ஷெியாரியற்றிய இதர புத்தகங்கள்

| | |
|---|---|
| இந்து தேசாபிமானிகள் ஜீவிய செந்தமிழ் திலகம் | 0—8—0 |
| ஷெ 1, 2 பாகங்கள் தனித்தனி (புத்தகம் 1-க்கு) | 0—4—0 |
| ஷெியுக அவதார காந்திமஹான் திலகரத்னகரம் | 0—1—0 |
| மதுரைநகர் சிங்காரம் கலிகால வேடிக்கை சிந்து (முதற்பாகம் & இரண்டாம் பாகம்) | 0—2—0 |
| பழனி ஆண்டிப்பண்டாரம் பாட்டு (நூதன பாடல்கள்) | 0—1—0 |
| சுப்பிரமணியர் பாலாபிஷேகக் காவடிச்சிந்து | 0—1—0 |
| புருஷன் பெண்டாட்டி தர்க்கவேடிக்கை பாட்டு | 0—1—0 |
| கலிகால பறையன் பாட்டு | 0—1—0 |
| வள்ளியம்மை சரித்திரம் 1 & 2 பாகங்கள் | 0—8—0 |

பக்தி ஆனந்ததிரட்டு என்ற கீர்த்தனைகள் அச்சிலிருக்கிறது.

த. கிருஷ்ணசாமி பிள்ளை & பிரதர்,
புத்தக வியாபாரம் மதுரை.